# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2024.07.22 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## *நாணய மாற்றுண்டியல்கள் (திருத்தம்)*

**(82 ஆம் அத்தியாயமான) நாணய மாற்றுண்டியல்கள் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 30.00 தபாற் செலவு : ரூபா 150.00

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

**வாசகம் 2** : இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (82 ஆம் அத்தியாயமான) நாணய மாற்றுண்டியல்கள் கட்டளைச்சட்டத்துக்குப் பொதுவான திருத்தமொன்றைப் பயனுறுத்துவதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது முதன்மைச் சட்டவாக்கத்தில் "இலங்கை" என்னும் பதத்தை "இலங்கை" என்னும் பதத்தினால் மாற்றீடுசெய்வதாகும்.

**வாசகம் 3** : இவ்வாசகம் தெளிவு நோக்கத்துக்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துவதாகும்.

**வாசகம் 4** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது அப்போதைக்கு ஏற்புடையற்பாலதான சட்டப்படியான வீதத்துக்கிணங்க ஓர் உண்டியலின்மீதான வட்டியைக் கணக்கிடுவதற்கு ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

**வாசகம் 5** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது கொடுப்பனவுக் காலத்தைக் கணிப்பீடுசெய்வதில் அப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அருட்காலப்பகுதியைப் பிடித்துவைப்பதாகும்.

**வாசகம் 6** : இவ்வாசகம் தொடர்பாடல் அபிவிருத்திகளின் நோக்கில் குறித்தசில காலங்கடந்த செயல்முறைகளை விட்டுவிடுவதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துவதாகும்.

**வாசகம் 7** : இவ்வாசகம் சட்டவாக்கத்தைத் தற்போதைய வரைதற் செயல்முறைகளுக்கிணங்க வாக்குவதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவைத் திருத்துவதாகும்.

**வாசகம் 8** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது தொலைநகல் கடத்துகை அல்லது வேறு இலத்திரனியல் வழிவகைகள்மூலம் மதிப்பளிக்காமைபற்றிய அறிவித்தலைக் கொடுப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

**வாசகம் 9** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது பணம்பெறுநரின் பெயர் மாற்றத்தையும் ஒரு முக்கியமான மாற்றமாகக் கொள்வதற்கு ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

**வாசகம் 10** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது கொடுப்பனவுக்கான காசோலையொன்றின் உருவத்தைத் தொலைநகல் கடத்துகை அல்லது வேறு வழிவகைகள்மூலம் பணஞ்செலுத்தும் வங்கிக்கு வங்கியாளர் கடத்துவதனை இயலச்செய்வதாகும்.

**வாசகம் 11** : இவ்வாசகம் சட்டவாக்கத்தைத் தற்போதைய வரைதற் செயல்முறைகளுக்கிணங்க வாக்குவதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவைத் திருத்துவதாகும்.

**வாசகம் 12** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 77 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது ஒரு காசோலையின் இருபக்கங்களிலும் ஒரு காசோலைக்குக் குறுக்குக் கோடிடும் செயல்முறையை நியதிச்சட்டமுறையாக ஏற்றங்கீகரிப்பதாகும்.

**வாசகம் 13** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது வங்கிகளுக்குப் பணஞ்செலுத்துவதற்கான பாதுகாப்பை அதிகரிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

***வாசகம் 14*** : இவ்வாசகம் *முதன்மைச் சட்டவாக்கத்தின் 81 ஆம் பிரிவை மாற்றீடுசெய்வதுடன் புதிய பிரிவின் சட்டப்பயனானது* "*மட்டும்*" *என்ற சொல்லுடனோ அல்லது அதுவின்றியோ* "*கணக்குவைத்திருப்பவருக்கு*" *என்ற குறுக்குக்கோடிடுதலுக்கு நியதிச்சட்டமுறையான ஏற்றங்கீகாரம் வழங்குவதாகும்.*

***வாசகம் 15*** : இவ்வாசகம் *முதன்மைச் சட்டவாக்கத்தின் 82 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது வங்கியாளர்களுக்குப் பணஞ்செலுத்துவதற்கான பாதுகாப்பை அதிகரிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்வதாகும்.*

***வாசகம் 16*** : இவ்வாசகம் *முதன்மைச் சட்டவாக்கத்தில் 82அ முதல் 82ஊ வரையிலான புதிய பிரிவுகளை உட்புகுத்துவதுடன் புதிய பிரிவுகளின் சட்டப்பயனானது குறித்தசில காசோலைகளுக்கு மதிப்பளிக்காமை தொடர்பில் தண்டங்களுக்கும் வேறு விளைவாந்தன்மையினவான கருமங்களுக்கும் ஏற்பாடுகளைச் செய்வதாகும்.*

***வாசகம் 17*** : இவ்வாசகம் *குறித்தசில காலங்கடந்த ஏற்பாடுகளை நீக்கிவிட்டு முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.*

**நாணய மாற்றுண்டியல்கள் (திருத்தம்)**

*ச.வ.-ஓ. 10/2024*

## (82 ஆம் அத்தியாயமான) நாணய மாற்றுண்டியல்கள் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, நாணய மாற்றுண்டியல்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*82 ஆம் அத்தியாயத்துக்கான பொதுவான திருத்தம்*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (82 ஆம் அத்தியாயமான) நாணய மாற்றுண்டியல்கள் கட்டளைச்சட்டம், "இலங்கை" என்னும் சொல் முதன்மைச் சட்டவாக்கத்தில் காணப்படும் இடங்களிலெல்லாம் அதற்குப் பதிலாக, "இலங்கை" என்னும் சொல்லை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "வங்கியாளர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்:-

" "வங்கியாளர்" என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின் கருத்துக்குட்பட வங்கித்தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்று அல்லது உரிமம்பெற்ற விசேடித்த வங்கியொன்று அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட ஒரு வெளிநாட்டு வங்கியின் கிளையொன்று என்று பொருளாகும்;"; அத்துடன்

(2) "ஒப்படைப்பு" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன்மூலமும்:-

" "இலத்திரனியல் வழிவகைகள்" என்பது, ஊடகத்தைப் பொருட்படுத்தாது, இலத்திரனியல், காந்த, ஒளியியல் அல்லது வேறேதேனும் ஒத்த தன்மையின்மூலம் தகவலானது எந்த முறையின்மூலம் தோற்றுவிக்கப்படுகின்றதோ, அனுப்பப்படுகின்றதோ, பெறப்படுகின்றதோ அல்லது தேக்கிவைக்கப்படுகின்றதோ அந்த ஏதேனும் முறை என்று பொருளாதல் வேண்டும்;

" "தொலைநகல் கடத்துகை" என்பது, ஓர் எழுத்திலான, அச்சிடப்பட்ட அல்லது படஞ்சார் ஆவணத்தை நிழல் மின்சாரரீதியில் ஊடுகதிர்ப்படமெடுத்து கடத்துகைக்குப் பின்னர் அதன் உருவத்தை மீளத்தோற்றுவிப்பதன்மூலம் தொலைபேசி முறைமையினூடாகக் கடத்துகின்றமை என்று பொருளாகும்;".

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், "ஆண்டொன்றுக்கு ஒன்பது சதவீதம் என்ற வீதத்திலிருத்தல் வேண்டும்:" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அப்போதைக்கு ஏற்புடையற்பாலதாகவுள்ள சட்டப்படியான வீதமாக இருத்தல் வேண்டும்:" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்*

"(1) உண்டியலானது எல்லா விடயங்களிலும் உண்டியலினால் நிர்ணயிக்கப்பட்டவாறான கொடுப்பனவுக் காலத்தின் கடைசி நாளன்று அல்லது அது வேலை நாளல்லாத நாளொன்றாகவிருப்பின், அடுத்துவரும் வேலைநாளன்று வருமதியாகவும் செலுத்தப்படற்பாலதாகவும் உள்ளது.".

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவை நீக்குதல்*

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "உண்டியலொன்று புறக்குறிப்பிடப்படின்" என்னும் சொற்களிலிருந்து அவ்வுட்பிரிவின் முடிவுவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவைத் திருத்துதல்*

"உண்டியலொன்று புறக்குறிப்பிடப்படின், "D என்பவருக்கு மட்டும் செலுத்தவும்", "X என்பவரின் கணக்குக்காக D என்பவருக்குச் செலுத்தவும்" அல்லது "D என்பவருக்குச் செலுத்தவும் அல்லது சேகரிப்புக்காகக் கட்டளையிடவும்".".

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவு, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவைத் திருத்துதல்*

"(5) அறிவித்தலானது எழுத்தில் அல்லது தனிப்பட்ட தொடர்பாடல் மூலம் அல்லது தொலைநகல் கடத்துகைமூலம் அல்லது உண்டியலைப் போதியளவில் அடையாளங்காண்கின்ற வேறு இலத்திரனியல் வழிவகைகள்மூலம் கொடுக்கப்படலாமென்பதுடன் ஏற்றுக்கொள்ளப்படாமை அல்லது கொடுப்பனவு செய்யப்படாமைமூலம் உண்டியலுக்கு மதிப்பளிக்கப்பட்டிருக்கவில்லையெனவும் தெரிவிக்கலாம்.".

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "தேதியிலான," என்னும் சொல்லுக்குப் பதிலாக "பணம்பெறுநரின் பெயரிலான, தேதியிலான," என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவைத் திருத்துதல்*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவைத் திருத்துதல்*

***10.*** *முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவு களைச் சேர்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-*

"*(4) (அ) வங்கியாளரொருவர், கொடுப்பனவுக்காகக் காசோலையையே முன்வைப்பதற்குப் பதிலாக, காசோலையின் விதிக்கப்பட்ட இலத்திரனியற் கொடுப்பனவுத் தகவலுடன் சேர்த்து அதன் உருவமொன்றைக் கடத்துவதன்மூலம், அது எந்த வங்கியாளர்மீது வரையப்பட்டதோ அந்த வங்கியாளருக்குக் கொடுப்பனவுக்காகத் தொலைநகல் கடத்துகைமூலம் அல்லது வேறு இலத்திரனியல் வழிவகைகள்மூலம் காசோலையொன்றை முன்வைக்கலாம்.*

*(ஆ) இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக –*

(i) *ஒரு காசோலையின் உருவம், அக் காசோலையின் முற்புறத்தையும் பிற் புறத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்*

(ii) *ஒரு காசோலையின் இலத்திரனியற் கொடுப்பனவுத் தகவல் பின்வருவன வற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்:-*

(i) *அக்காசோலையின் தொடரிலக்கம்;*

(ii) *அக்காசோலை எந்த வங்கியாளர் மீதும் கிளையின்மீதும் வரையப்படு கின்றதோ அந்த வங்கியாளரையும் கிளையையும் அடையாளங் காண் கின்ற குறியீடு;*

(iii) *அக்காசோலையை வரைபவரின் கணக்கிலக்கம்;*

(iv) *அக்காசோலையை வரைபவரினால் பதியப்பட்டவாறு காசோலையானது எத்தொகைக்காக வரையப்படுகின்றது என்பது; அத்துடன்*

(v) கொடுப்பனவு, தீர்வுசெய்தல் மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகள் தொடர்பான ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதியினால் காலத்துக்குக்காலம் விதித்துரைக்கப்படக்கூடியவாறான வேறேதேனும் கருமம்.

(5) ஐம்பத்திரெண்டாம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் பின்வருவனவற்றுக்கு ஏற்புடையனவாதலாகாது:-

(அ) (4) ஆம் உட்பிரிவின்கீழ் காசோலையொன்றைக் கொடுப்பனவுக்காக முன்வைத்தலுக்கும்; அத்துடன்

(ஆ) (4) ஆம் உட்பிரிவின்கீழான முன்வைத்தலையடுத்துச் செலுத்தப்படும் ஒரு காசோலைக்கும்.

(6) நான்காம் உட்பிரிவின்கீழ் காசோலையொன்று வங்கியாளரொருவரினால் கொடுப்பனவுக்காக முன்வைக்கப்படுமிடத்து, 45 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையற்பாலனவாக உள்ளனவென்றும் தகுந்த இடத்திலும் அல்லது வேலைநாளொன்றில் நியாயமானவொரு நேரத்திலும் முன்வைத்தல் செய்யப்படுவதனைத் தேவைப்படுத்துகின்றனவென்றும் பொருளமைத்துக்கொள்ளப்படுதலாகாது.

(7) இப்பிரிவின் நோக்கத்துக்காக, ஒரு காசோலையின் உருவம் அல்லது முன்வைக்கப்பட்ட அதன் இலத்திரனியல் கொடுப்பனவுத் தகவல்களுள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை செம்மையற்றதாக அல்லது செம்மையற்றவையாக இருக்குமிடத்து, அத்தகைய முன்வைத்தல் வெற்றானதன்மையைக் கொண்டிருத்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவை மாற்றீடுசெய்தல்*

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*"பொதுவான மற்றும் விசேடமான குறுக்குக் கோடுகளுக்கு வரைவிலக்கணங் கூறப்படுகின்றது.*

76. (1) ஒன்றில் "கைமாற்றத்தக்கதல்ல" என்ற சொற்களுடன் அல்லது அச்சொற்களின்றி இரண்டு சமாந்தரமான பக்கத்தினின்று பக்கம் நீளுகின்ற கோடுகளின் சேர்க்கையொன்றைக் காசோலையொன்று அதன் முகப்புக்குக் குறுக்கே கொண்டுள்ளவிடத்து, அச்சேர்க்கை ஒரு குறுக்குக் கோடாக அமைகின்றதுடன் அக்காசோலையானது பொதுவாகக் குறுக்குக்கோடிடவும்படுகின்றது.

(2) ஒன்றில் "கைமாற்றத்தக்கதல்ல" என்ற சொற்களுடன் அல்லது அச்சொற்களின்றி ஒரு வங்கியாளரினது பெயரின் சேர்க்கையைக் காசோலையொன்று அதன் முகப்புக்குக் குறுக்கே கொண்டுள்ளவிடத்து, அச்சேர்க்கை ஒரு குறுக்குக் கோடாக அமைகின்றதுடன் அக்காசோலை விசேடமாகவும் அவ்வங்கியாளருக்கும் குறுக்குக்கோடிடவும்படுகின்றது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 77 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 77 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(4) காசோலையொன்று பொதுவாக அல்லது விசேடமாகக் குறுக்குக்கோடிடப்படுமிடத்து, ''கைமாற்றத்தக்கதல்ல'' என்ற சொல்லை வைத்திருப்பவர் சேர்க்கலாம்.; அத்துடன்

(2) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில், "அவருக்கே குறுக்குக்கோடிடலாம்." என்னும் சொற்களுக்குப்

பதிலாக, "அவருக்கே குறுக்குக்கோடிடலாம் என்பதுடன் அத்தகைய குறுக்குக்கோடிடுகை, சேகரிப்பு நோக்கத்துக் காக, ஒன்றில் அக்காசோலையின் முகப்பில் அல்லது பிற்புறத்தில் இடவும்படலாம்." என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவைத் திருத்துதல்*

***13.*** முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் மீளஇலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(2) ஓராம் உட்பிரிவின்கீழ் காசோலைக்குப் பணஞ்செலுத்துகின்ற வங்கியாளர், புறக்குறிப்பில் லாமை அல்லது புறக்குறிப்பிலான ஒழுங்கீனம் காரணமாக மட்டும் ஏதேனும் பொறுப்பை உறுதலாகா தென்பதுடன் கொடுப்பனவானது அக்காசோலையைப் பொறுப்புவிடுவிக்கின்றது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 81 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்*

***14.*** முதன்மைச் சட்டவாக்கத்தின் 81 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படு கின்றது:-

"சொற்களினால் காசோலையொன்றில் குறுக்குக் கோடிடுவதன் பயன்

81. (1) "கைமாற்றத்தக்கதல்ல" என்னும் சொல்லை அதன்மீது கொண்டுள்ள காசோலை யொன்றை ஆளொருவர் எடுத்துச்செல்லுமிடத்து, அவர் எந்த ஆளிடமிருந்து அக்காசோலையை எடுத்தாரோ அந்த ஆள் அதற்குக் கொண்டிருந்த உரித்தைவிடக் கூடுதல் சிறந்ததான உரித்தை அவர் கொண்டிருத்தலோ அல்லது கொடுப்பதற்கு இயன்றவராகவிருத்தலோ ஆகாது.

(2) காசோலையொன்று குறுக்குக் கோடிடப் பட்டுள்ளவிடத்து அல்லது குறுக்குக் கோடிடப் படாதவிடத்து மற்றும் ஒன்றில், "மட்டும்" என்ற சொல்லுடனோ அல்லது அதுவின்றியோ, "பணம்பெறுநரின் கணக்குக்கு" அல்லது "பணம் பெறுநரின் க/குக்கு" என்னும் சொற்களை அதன் முகப்பிற்குக் குறுக்கே கொண்டுள்ளவிடத்து, அக்காசோலை கைமாற்றத்தக்கதாகவிருத்தலாகாது என்பதுடன் அதற்கான திறத்தவர்களுக்கிடையே யுள்ளவாறாக மட்டும் செல்லுபடியுடையதாதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாகத்தின் 82 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 82 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:–

(1) அவ்வுட்பிரிவை அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியாக மீளஎழுத்திடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் மீளஎழுத்திடப்பட்ட பந்தி (அ) வை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(ஆ) வங்கியாளரொருவர், காசோலையொன்றில் புறக்குறிப்பு இல்லாமை அல்லது அதிலான ஒழுங்கீனம் பற்றிக் கரிசனைகொள்வதற்கு அவர் தவறியமை காரணமாக மட்டும் அசட்டையாக விருந்துள்ளாரெனப் பந்தி (அ) வின் நோக்கத்துக்காகக் கொள்ளப்படு தலாகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 82அ, 82ஆ, 82இ, 82ஈ, 82உ மற்றும் 82ஊ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்*

**16.** முதன்மை சட்டவாக்கத்தின் 82 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றனவென்பதுடன் இவை அச்சட்டவாக்கத்தின் 82அ, 82ஆ, 82இ, 82ஈ, 82உ மற்றும் 82ஊ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"குறித்தசில காசோலைகளுக்கு மதிப்பளிக்காமை தொடர்பிலான தண்டங்கள்.

82அ. (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, ஏதேனும் தனிசை அல்லது வேறு பொறுப்பை முழுமையாக அல்லது பகுதியளவில் பொறுப்புவிடுவிப்பதற்காக ஒரு வங்கியில் வாடிக்கையாளரொருவரினால் பேணப்பட்டவொரு கணக்கிலிருந்து வேறோர் ஆளுக்கு ஏதேனும் பணத்தொகையைக் கொடுப்பனவு செய்வதற்காக அக்கணக்கின்மீது அவரினால் வரையப்பட்ட ஏதேனும் காசோலையானது –

(அ) அக்கணக்கின் வரவிற்கிருக்கும் பணத்தொகை அக்காசோலைக்கு மதிப்பளிப்பதற்குப் போதாததாக;

(ஆ) அக்காசோலையின் தொகை, வங்கியுடன் செய்யப்பட்டவோர் உடன்பாட்டின்மூலம் அக்கணக்கிலிருந்து பணஞ்செலுத்தப்படுவதற்கு ஒழுங்கேற்பாடுசெய்யப்பட்ட தொகையை விஞ்சுவதாக;

(இ) வரைபவர், மூடப்பட்டவொரு கணக்கிலிருந்து காசோலையொன்றை வழங்கியுள்ளதாக; அல்லது

(ஈ) வரைபவர், (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி ஏதேனும் சட்டமுறையான காரணமின்றி அவரினால் வழங்கப்பட்ட காசோலையொன்றுக்கு எதிர்க்கட்டளை ஆக்கியுள்ளவராக,

இருப்பதன்காரணமாகப் பணஞ்செலுத்தப்படாமல் வங்கியினால் திருப்பியனுப்பப்படுமிடத்து, அத்தகைய ஆள் தவறொன்றைப் புரிந்துள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மீது காசோலைத் தொகைக்குச் சமமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு

காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் பின்வரும் சந்தர்ப்பங்களில் மட்டுமே ஏற்புடையனவாதல் வேண்டும்:-

(அ) காசோலையானது வரையப்படும் தேதியிலிருந்து ஆறுமாதகாலப்பகுதியொன்றினுள் அல்லது அதன் செல்லுபடிக்காலப்பகுதியினுள், இவற்றுள் எது முந்தியதோ அக்காலப்பகுதியினுள் பணஞ்செலுத்தும் வங்கிக்கு முன்வைக்கப்பட்டிருப்பின்;

(ஆ) காசோலையின் பணம்பெறுநர் அல்லது அதனை உரியகாலத்தில் உடைமை கொள்பவர், பணஞ்செலுத்தப்படாததாகக் காசோலை திருப்பியனுப்பப்பட்டமை தொடர்பாகச் சேகரிக்கின்ற வங்கியிடமிருந்து அல்லது பணஞ்செலுத்தும் வங்கியிடமிருந்து அவரினால் தகவல் பெறப்பட்டதிலிருந்து தொண்ணூறு நாட்களினுள், திருப்பியனுப்பப்பட்ட காசோலையின் பெறுமதியினது கொடுப்பனவுக்கான கோரிக்கையொன்றைக் காசோலையை வரைபவருக்கு எழுத்தில் செய்யின்; அத்துடன்

(இ) காசோலையை வரைபவர், கோரிக்கைத் தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களினுள், அத்தகைய கோரிக்கைக்கான பதிலிறுப்பாகக் காசோலையின் பணம்பெறுநருக்கு அல்லது அதனை உரியகாலத்தில் உடைமை கொள்பவருக்கு அக்கொடுப்பனவைச் செய்யத் தவறின்.

(3) காசோலையொன்றின்மீது "வரைபவருக்கு ஆற்றுப்படுத்தவும்", "கணக்கு மூடப்பட்டுள்ளது" அல்லது "வரைபவரினால் கொடுப்பனவுக்கு எதிர்க்கட்டளை ஆக்கப்பட்டுள்ளது" என்னும் சொற்களை எழுதுவதன்மூலம் பணஞ்செலுத்தும் வங்கியொன்று அக்காசோலைக்கு மதிப்பளிக்காத விடத்து அல்லது ஒரு சேகரிக்கின்ற வங்கியினால் வழங்கப்பட்டவொரு காசோலைத் திருப்பிய னுப்புகை அறிவிப்பில் அத்தகைய சொற்கள் குறிப்பிடப்படுகின்றவிடத்து, வரைபவரின் கணக்கில் நிதிகள் போதாமைகாரணமாக அக் காசோலைக்கு மதிப்பளிக்கப்படவில்லையென ஊகிக்கப்படுதல் வேண்டும்.

சட்ட நடவடிக்கையைத் தொடுத்தல்.

82ஆ. வரைபவரின் கணக்கில் நிதிகள் போதாமை காரணமாகப் பணஞ் செலுத்தப்படாமல் திருப்பியனுப்பப்பட்டுள்ள காசோலையொன்றின் பணம்பெறுநர் அல்லது அதனை உரியகாலத்தில் உடைமைகொள்பவர், 82அ என்னும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியிற் குறித் துரைக்கப்பட்ட காலப்பகுதி முடிவுற்றதிலிருந்து முப்பது நாட்களினுள் உரிமைக்கோரிக்கை யாளராகச் சட்ட நடவடிக்கையைத் தொடுக்கலாம்.

நியாயாதிக்கம்.

82இ. இக்கட்டளைச்சட்டத்தின்கீழான தவ றொன்றைக் கேட்டுத்தீர்மானிப்பதற்கான நியாயா திக்கம்,-

(அ) காசோலையின் பணம்பெறுநரினது அல்லது அதனை உரியகாலத்தில் உடைமை கொள்பவரினது கணக்கினூடாக அக் காசோலை சேகரிப்புக்காக வைப்பிலிடப் படுமிடத்து, அத்தகைய பணம்பெறுநர் அல்லது அதனை உரிய காலத்தில் உடைமைகொள்பவர் கணக்கைப் பேணு கின்ற வங்கியின் கிளை எந்த நீதிவான் நீதிமன்றத்தின் இடப்பிரதேச நியாயா

திக்கத்தினுள் அமைந்துள்ளதோ அந்த நீதிவான் நீதிமன்றத்துக்கு; அல்லது

(ஆ) காசோலையின் பணம்பெறுநரினால் அல்லது அதனை உரியகாலத்தில் உடைமை கொள்பவரினால் அக்காசோலையானது பணஞ்செலுத்தும் வங்கியின் கிளைக்குக் கொடுப்பனவுக்காக முன்வைக்கப்படுமிடத்து, வரைபவர் கணக்கைப் பேணுகின்ற வங்கியின் கிளை எந்த நீதிவான் நீதிமன்றத்தின் இடப்பிரதேச நியாயாதிக்கத்தினுள் அமைந்துள்ளதோ அந்த நீதிவான் நீதிமன்றத்துக்கு, உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

மதிப்பளிக்கப்படாத காசோலையொன்று பற்றிய முடிவான சான்று.

82ஈ. வரைபவரின் கணக்கில் நிதிகள் போதாமைகாரணமாக மதிப்பளிக்கப்படாத காசோலையொன்று பற்றிய முடிவான சான்றாகப் பின்வருவன கொள்ளப்படுதல் வேண்டும்:-

(அ) சேகரிக்கின்ற வங்கியினால் வழங்கப்பட்ட காசோலைத் திருப்பியனுப்புகை அறிவிப்பு;

(ஆ) சேகரிக்கின்ற வங்கியினால் ஒப்புக்கொள்ளப்பட்ட வைப்பிடுகை நறுக்கு; அல்லது

(இ) பணஞ்செலுத்தும் வங்கியினால் திருப்பியனுப்பப்பட்ட காசோலை.

காசோலையினது பணஞ்செலுத்துநரின் அல்லது அதனை உரியகாலத்தில் உடைமைகொள்பவரின் சார்பான ஊகம்.

82உ. முரணாக எண்பிக்கப்பட்டாலொழிய, காசோலையின் பணஞ்செலுத்துநர் அல்லது அதனை உரியகாலத்தில் உடைமைகொள்பவர், வரைபவரின் ஏதேனும் தனிசை அல்லது வேறு பொறுப்பை முழுமையாக அல்லது பகுதியளவில் பொறுப்புவிடுவிப்பதற்காகக் காசோலையைப் பெற்றாரென ஊகிக்கப்படுதல் வேண்டும்.

ஆட்கள் குழுவொன்றினாலான தவறுகள்.

82ளஉ. இக்கட்டளைச் சட்டத்தின்கீழான தவறொன்றுக்காக ஆட்கள் குழுவொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்படுமிடத்து, அப்போது –

(அ) அவ்வாட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருப்பின், அத்தகைய தவறு புரியப்பட்ட நேரத்தில் அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும், முகாமையாளரும், அல்லது செயலாளரும்;

(ஆ) அவ்வாட்கள் குழு ஒரு குழுமமாக விருப்பின், அத்தகைய தவறு புரியப்பட்ட நேரத்தில் அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும்; அத்துடன்

(இ) அவ்வாட்கள் குழு ஒரு கூட்டிணைக்கப் படாத குழுவாகவிருப்பின், அத்தகைய தவறு புரியப்பட்ட நேரத்தில் அத்தகைய கூட்டிணைக்கப்படாத குழுவின் உறுப்பினரொருவராகவுள்ள ஒவ்வொரு தனியாளும்,

அத்தவறைப் புரிந்துள்ளவரெனக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் எவரேனும் பணிப்பாளர், முகாமையாளர் அல்லது செயலாளர் அல்லது அத்தகைய குழுமத்தின் எவரேனும் பங்காளர் அல்லது அத்தகைய கூட்டிணைக்கப்படாத குழுவின் எவரேனும் தனியாள், அத்தகைய தவறு அவர் அறியாமல் புரியப்பட்டதென்று அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் அவர் பிரயோகித்தாரென்று நீதிமன்றத்தின் திருப்திக்கு அவர் எண்பித்தால், அத்தகைய தவறைப் புரிந்துள்ளவராகக் கருதப்படுதலாகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவைத் திருத்துதல்*

***17.*** *முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவு,* "இப்பிரிவின் நோக்கத்துக்காக" என்னும் சொற்களிலிருந்து அப்பிரிவின் முடிவுவரையுள்ள எல்லாச் சொற்களையும் நீக்கிவிடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

***18.*** இச்சட்டத்தின் *சிங்கள*, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் *சிங்கள* உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.